# THE FXEC TIMES

Empowering your Future

தமிழ்

www.francisxavier.ac.in
facebook.com/fxengg/
instagram.com/fx_ec/

மலர் - 1

இதழ் - 7

நவம்பர் 2022










## எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரி மாணவர்கள் நவீன எலக்ட்ரிக்காரை கண்டுபிடித்து சாதனை!

### நிறுவனர் S.கிளிட்டஸ் பாபு பாராட்டு!

நெல்லை வண்ணார்பேட்டை எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரியின் அப்ளைட் லேப் மற்றும் மெக்கானிக்கல் துறையும் இணைந்து புதிய எலக்ட்ரிக் காரை கண்டுபிடித்துள்ளனர். இந்த சாதனையை ஸ்காட் கல்வி குழும நிறுவனர் முனைவர் S.கிளிட்டஸ் பாபு பாராட்டினார்.

எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரியின் இன்னோவேஷன் மற்றும் ப்ராடக்ட் டெவலப்மென்ட் அப்ளைடு லேப் (Innovation, Product development applied Lab) குழுவுடன் இணைந்து மெக்கானிக்கல் இன்ஜினியரிங் துறை சுற்றுச் சூழலுக்கு உகந்த எலக்ட்ரிக் காரை உருவாக்கி சாதனை படைத் துள்ளது. இது 6 இருக்கைகள் மற்றும் தோராயமாக 750 கிலோ எடையை சுமக்கும் திறன் கொண்டது. மணிக்கு 40 கிமீ வேகத்தில் 70 கிலோமீட்டர் வரை பயணிக்கலாம். ஒரு சிறப்புத் தனிப்பயனாக்கப்பட்ட லித்தியம் ஃபெரோ பாஸ்பேட் 60 வோல்ட் 30 ஆம்ப்ஸ் பேட்டரி, சாதாரண லித்தியம் அயன் பேட்டரிக்கு மாற்றாக அதிக திறன், நீடித்த மற்றும் விரைவாக சார்ஜ் செய்யக்கூடிய மாற்றுகளுடன் ஆற்றல் மூலமாகப் பயன்படுத்தப்படுகிறது



நிறுவனர் முனைவர் s கிளிட்டஸ் பாபு, பொதுமேலாளர்கள் ஜெயக்குமார், கிருஷ்ணகுமார் எலக்ட்ரிக் கார் சோதனை ஓட்டத்தின் போது இருந்தனர்.

இது சந்தையில் எளிதாகக் கிடைக்கும் மற்ற வாகனங்களுடன் ஒப்பிடும் போது, இந்த வாகன வடிவமைப்பை, எளிமையான, பராமரிப்புக்கு எளிதான மற்றும் மலிவு பட்ஜெட்டில் (1.5 லட்சத்திற்கும் குறைவான) பிற பாகங்களை பொருத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. எப்.எக்ஸ். கல்லூரி வளாகத்தில் உள்ள பார் வையாளர்கள் மற்றும் அனை த்துதுறை சார்ந்தவர்களுக்கும், இந்த கார் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மெக்கானிக்கல் துறை தலைவர் சாமுவேல் ஹேன்சன் வழிகாட் டுதலின் பேரில் மெக்கானிக்கல் துறை உதவிபேராசிரியர் ஷேக்சுலைமான், புதுமை மற்றும் தயாரிப்பு மேம்பாடு, பயன்பாட்டு ஆய்வக பொறுப்பாளர் ஜெரிமி ஜெபா சாமுவேல், உற்பத்தி மற்றும் ஃபேப்ரிகேஷன் பயன்பாட்டு ஆய்வக பொறுப்பாளர், கண்ணன், டெக்னீசியன், மெக் கானிக்கல் லேப் மற்றும் முத்து மணிகண்டன், டெக்னீஷியன், ஆகியோர் எலக்ட் ரிக்கார் தயாரிப்பு பணியை செய்திருந்தனர். இந்த எலக்ட்ரிக்காரின் சோதனை ஓட்டம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இதில் ஸ்காட் கல்வி குழும நிறுவனர் முனைவர் S.கிளிட் டஸ் பாபு, துணைத் தலைவர் முனைவர் அமலி கிளிட்டஸ் பாபு, பொதுமேலாளர்கள் முனைவர் K.ஜெயகுமார், திரு. S.கிருஷ்ணகுமார் ஆகியோர் பயணம் செய்தனர். இதனை தயாரித்த கல்லூரி மெக்கா னிக்கல் துறை குழுவினரை நிறுவனர் கிளிட்டஸ் பாபு வெகுவாக பாராட்டினார். இந் நிகழ்வு கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல்முருகன் முன்னிலையில் நடைபெற்றது.

## "தொழில்முனைவோரின் பங்கு" சிவில் துறை கருத்தரங்கு!



எப்.எக்ஸ்.பொறியியல் கல்லூரியின் தொழில் முனைவோர் மேம் பாட்டுப் பிரிவு சிவில் இன்ஜினியரிங் துறையுடன் இணைந்து சிவில் இன்ஜினியரிங் இறுதி யாண்டு மாணவர்களுக்கான கலந் தாய்வு நிகழ்ச்சி நடித்தியது. இதில், உதவி பேராசிரியர் சுவேதா தலைமை வகித்தார்.

அவர் பேசுகையில், தொழில் முனை வோரின் அடிப்படை அம்சங்கள் என்பது, புதுமை, ஆபத்து தாங்கும் திறன், ஆக்கப்பூர்வமான முடிவு, நிர்வாகத் திறன் மற்றும் தலைமை, இடைவெளி நிரப்புதல் செயல்பாடு, வணிகம் சார்ந்த போக்கு, பொருளாதார செயல்பாடு, முடிவுகளை உருவாக்குதல் மற்றும் வாழ்க்கை முறை ஆகியவையாகும். மேலும் தொழில் முனைவோர் வறுமையை குறைத்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பை அதிகரிக்கிறது, தேவையை பூர்த்தி செய்கிறது. மக்களின் கோரிக்கை மற்றும் நாட்டின் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்த உதவுகிறது. மேலும், தொழில்முனைவோர் தோல்வி குறித்த காரணங்கள் குறித்தும் அவர் சுட்டிக்காட்டினார்.

வாய்ப்பு தட்டவில்லை என்றால் ஒரு கதவை தட்டுங்கள் என்று விழிப்புணர்வு கருத்துக்களை கூறினார். இந்நிகழ்வில், 45 மாணவர்களும், 2 ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். இதனை தொழில் முனைவோர் துறை ஒருங் கிணைப்பாளர் ராஜ பிரியா செய்திருந்தார்.

## எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரியுடன் மேக்சலரேட்டர் பவுண்டேஷன் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

### நிறுவனர் S.கிளிட்டஸ் பாபு முன் கையெழுத்து!

நெல்லை வண்ணார்பேட்டை பொறியியல் கல்லூரியும் மேக்சலரேட்டர் நிறுவனமும் இணைந்து தொழில் ஆதரவு மற்றும் பல்வேறு சிறப்பு அம்சங்களுக்காக நிறுவனர் முனைவர் S.கிளிட்டஸ் பாபு முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியின் செயற்கை நுண்ணறிவு மற்றும் டேட்டா சயின்ஸ் துறையில் பயிலும் மாணவர்களுக்கு தொழில்துறை ஆதரவு படிப்பு, இன்டர்ன்ஷிப், தயாரிப்பு மற்றும் புரோடைப் மேம்பாடு, ஆய்வகத்தை நிறுவுதல், தொடக்க தொழில் முனைவோர் ஆதரவு, விருந்தினர் விரிவுரை, பட்டறைகள், வளர்ந்து வரும் தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சி, ஹேக்கத்தான் போட்டிக்கான ஆதரவு உள்ளிட்டவைகளுக்கான மதுரை மேக்சலரேட்டர் பவுண்டேஷன் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ஸ்காட் கல்வி நிறுவனர் முனைவர் S.கிளிட்டஸ் பாபு முன்னிலையில் கையெழுத்தானது. இதில் மேக்ச லரேட்டர் பவுண்டேஷன் நிறுவன இயக்குநர் நானுசாமி, கல்வி



மேக்சலரேட்டர் பவுண்டேஷன் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் நிகழ்வில் நிறுவனர் கிளிட்டஸ் பாபு, பொதுமேலாளர்கள் ஜெயக்குமார், கிருஷ்ணகுமார், முதல்வர் வேல்முருகன், இயக்குநர் முகமது சாதிக் உள்ளனர்.

ஆராய்ச்சி இயக்குநர் கார்த்திக், நிகழ்ச்சி இயக்குநர் ராபின் ஆகியோர் கலந்துகொண்டனர் .

இதனையடுத்து புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் தொழிற்சாலை ஆதரவு அம்சங்கள் குறித்து மதுரையை தலைமையிடமாக கொண்டு செயல்படும் மாக்சிலரேட்டர் பவுண்டேஷன் நிறுவன அதிகாரிகள் மாணவ, மாணவியருக்கு விளக்கம் அளித்தனர். 4ம் ஆண்டு படிப்பை முடிக்கும் முன்பே ஸ்டார்ட் அப் மூலமாக வெற்றிகரமான தொழில் முனைவோராக திகழ்வதற்கு அனைத்து உதவிகளை அளிப்பதாகவும் உறுதி அளித்தனர். மாணவர்களின் யோசனைகளையும் கேட்டறிந்தனர்.

இந்நிகழ்வில் பொதுமேலாளர்கள் முனைவர் K.ஜெயக்குமார், S.கிருஷ்ணகுமார், கணினித் துறை இயக்குநர் முனைவர் முகமது சாதிக், கல்லூரி முதல்வர் வேல்முருகன், தொழில் முனைவோர் துறை இயக்குநர் முனைவர் லூர்டஸ் பூபாலராயன், துறைத் தலைவர் முனைவர் அனிதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## செயற்கை நுண்ணறிவு & டேட்டா சயின்ஸ் துறை கலந்துரையாடல்



செயற்கை நுண்ணறிவு & டேட்டா சயின்ஸ் துறை மாணவர்களுடன் உரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது. தொழில் நுட்பங்கள் குறித்த தங்கள் சந்தேகங்களை விவாதித்தனர். மேக்ஸலரேட்டரைச் சேர்ந்த நாணுசாமி மற்றும் கார்த்திக் ஆகியோர் மாணவர்கள் பகிர்ந்து கொண்ட சில புதுமையான யோசனைகளைப் பாராட்டினர். EDII கள மைய சிவபாரதி, திருநெல்வேலி, MSME மற்றும் தமிழ்நாடு அரசு வழங்கும் பல்வேறு நிதி திட்டங்களுக்கான முன் மொழிவுகளை சமர்ப்பிக்க மாணவர்களை ஊக்கப்படுத்தினார்.

FRANCIS XAVIER ENGINEERING COLLEGE
AN AUTONOMOUS INSTITUTION
Vannarpettai, Tirunelveli

THE FXEC TIMES
நவம்பர் 2022

## "புத்தகம் வாசிப்பின் முக்கியத்துவம்" நிகழ்வு

மாணவர்களிடையே வாசிப்புத் திறனை உருவாக்குவதற்கான 'முழக்கத்துடன் முக்கியத்துவம்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதும் போட்டியை ஏற்பாடு செய்தது.

மத்திய நூலகத்தில் அனைத்து துறை மாணவர்களுக்கும் படித்தல் நிகழ்வுக்காக கல்லூரியின் 188 மாணவர்கள் பதிவு செய்திருந்தனர். அவர்களில் 26 மாணவர்கள் இந்த போட்டியில் தீவிரமாக பங்கேற்றனர்.

குறிப்பிடப்பட்ட கட்டுரை தலைப்பில் மாணவர்களால் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன மற்றும் அவர்களின் கட்டுரைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.



இதில் முதல் ஆண்டு எம்.பி.ஏ மாணவி விக்னேஸ்வரி பரிசை வென்றார், P. A. ஃபரீஷா அமீருதீன் இரண்டாம் பரிசையும், S. காயத்திரி (II CSE A) மூன்றாம் பரிசையும் வென்றனர். அவர்களை கல்லூரி முதல்வர் வேல்முருகன் பாராட்டினார். இந்நிகழ்வில் டாக்டர். வி. வேல்முருகன், முதல்வர், NDLI கிளப் புரவலர் கிளப் தலைவர் திருமதி R. ஸ்வேதா, நூலகர் T. பிரபு, கிளப் செயலாளர் கிளப் நிர்வாக உறுப்பினர் உதவி. பேராசிரியர் பி. பிரதீப் டி ராஜன், எஃப்எக்ஸ் ரீடர்ஸ் கிளப் ஒருங் கிணைப்பாளர்கள் எம். பாத்திமா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஜம்பிள் ரேஸ்: ஆங்கிலப் போட்டி




எப்.எக்ஸ். ஆங்கில வல்லுநர் கிளப் கல்வியாண்டிற்கான முதல் கிளப் செயல்பாட்டை 1வது சிவில் வகுப்பறையில் நடத்தப்பட்டது. ஆங்கில வார்த்தை ஜம்பிள் ரேஸ் என்ற போட்டியானது மாணவர்களின் காலங்கள், சொல் வரிசை மற்றும் இலக்கணத்தை விரிவாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. கிளப்பின் தலைவர் லூயிஸ் ஃபெஸ்டஸ் கிரேஸ்டன் முன்னிலையில் நிகழ்ச்சி தொடங்கியது. இதில் மொத்தம் 20 அணிகள் போட்டியில் பங்கேற்றன, ஒவ்வாரு அணியிலும் இரண்டு உறுப்பினர்கள் இடம்பெற்றனர்.

மாணவர்கள் ஒரே நிறத்தில் உள்ள சொற்கள் மற்றும் வாக்கியங்களைச் சேகரித்து சரியான வரிசையில் ஒரு வாக்கியத்தை வடிவமைக்க வேண்டும். இதில் பங்கேற்பாளர்கள் மிகவும் ஆர்வத்துடன் சொற்கள், வாக்கியங்களைச் சேகரித்தனர்.

இந்தப் போட்டியில் வெற்றியாளரை இறுதி செய்ய இரு அணிகளுக்கு இடையே டை-பிரேக்கர் சுற்று நடத்தப்பட்டது. இறுதியாக 2ம் ஆண்டு எலக்ட்ரானிக்ஸ் & கம்யூனிகேஷன் மனைவி சுபிக்ஷா குழு மாணவர்கள் மற்றும் மெல்பாவின் ஷியா ஆகியோர் போட்டியில் வெற்றி பெற்றனர். இரண்டாம் CSE 2ம் ஆண்டு கணினித்துறை மாணவிகள் தருண்ஸ்ரீ மற்றும் மதுமிதா முரளி ஆகியோர் இரண்டாம் இடத்தைப் பிடித்தனர்.

## எலக்ட்ரானிக்ஸ் & கம்யூனிகேஷன் துறை மாணவர்களுக்கு விருந்தினர் விரிவுரை நிகழ்ச்சி!




டிஸ்கவர் ஸ்டூட ண்ட்ஸ் கேரியர் பாத் வித் கேரியர் கோச்" என்ற தலைப்பில் பொறியாளர் சான்க்டா உரையாற்றுகிறார்

எலக்ட்ரானிக்ஸ் அண்ட் கம்யூனிகேஷன் இன்ஜி னியரிங் துறை மற்றும் எஃப்எக்ஸ் முன்னாள் மாணவர் சங்கம் இணைந்து "டிஸ்கவர் ஸ்டூடண்ட்ஸ் கேரி யர் பாத் வித் கேரியர் கோச்" என்ற தலைப்பில் ஒரு விருந்தினர் உரை நிகழ்ச்சி நடைபெற்றது

இந்த அமர்வுக்கு டாக்டர் M.சுரேஷ் சின்னத்தம்பி தலைமை வகித் தார். நிகழ்ச்சி நடைபெற்றது அவர் முன்னாள் மாணவர்களை அறிமுகப்படுத்தினார். எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரியின் முன்னாள் மாணவி மென் பொருள் பொறியாளர் சான்க்டா (2017-2021 Batch) (மைக்ரோசாப்ட், பெங்களூர்) தொழில் பயிற்சியாளருடன் 'மாணவர்களின் வாழ்க்கைப் பாதையைக் கண்ட றிதல்' என்ற தலைப்பில் விருந்தினர் விரிவுரையை வழங்கினார். உண்மையில் மென்பொருள் பொறியாளராக மாற விரும்பும் மாணவர்களுக்கு மைக்ரோ சாஃப்ட் இன்டர்ன்ஷிப்கள், தொழில் வாய்ப்புகள், பயிற்சிகள் போன்றவற்றில் செய்யப்பட்ட தொடர்புகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்நிகழ்வு அனைத்து எலக்ட்ரானிக்ஸ் கம்யூனிகேஷன் பொறியியல் மாணவர்களின் நலனுக்காக நடத்தப்பட்டது. இதில் சுமார் 100 மாணவர்கள் கலந்து கொண்டனர். பொதுமேலாளர் மற்றும் முன்னாள் மாணவர் சங்க இயக்குநர் S.கிருஷ்ணகுமார் வழிகாட்டு தலின் பேரில் முனைவர் ஆல்வின் தேவராஜ், முன்னாள் மாணவர் சங்க ஒருங்கிணைப்பாளர்கள் பேராசிரியர் பிரிஸ்கா உதவிப் பேரா சிரியர் டாக்டர் S.ஆல்வின் தேவராஜ் ஆகியோர் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர்.

## எலக்ட்ரிக்கல் & எலக்ட்ரானிக்ஸ் துறை செயல்முறை பயிலரங்கம்!




எலக்ட்ரிக்கல் & எலக்ட்ரானிக்ஸ் துறையின் வேலைவாய்ப்புக்கான பயிலரங்கத்தை கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல்முருகன் தொடங்கிவைத்தார்.

நெல்லை வண்ணார்பேட்டை பொறியியல் கல்லூரியின் எலக்ட்ரிக்கல் & எலக்ட்ரானிக்ஸ் துறை சார்பில் வேலை வாய்ப்புக்கான 2 நாள் பயிலரங்கம் நடைபெற்றது.

கல்லூரியின் எலக்ட்ரிக்கல் அண்ட் எலக்ட்ரானிக்ஸ் துறை மாணவர்கள் முன்னனணி நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெறுவதற்காக கல்லூரி நிர்வாகம் சார்பில் பிசிபி டிசைன் மற்றும் ஃபேப்ரி கேஷன் (PCB Design and Fabrication) குறித்த இரண்டு நாள் செயல் முறை பயிலரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் திருச்சி கால்வின் டெக்னாலஜி நிறு வனம் சார்பில் பிசிபி வடிவமைப்பாளர் தங்கராஜ், உட்பொதிக்கப்பட்ட (Embeded) வடிவமைப்பு பொறியாளர் கோபாலகிருஷ்ணன் மற்றும் மதுபாலா அருள்முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வை கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல் முருகன் தொட ங்கி வைத்தார்.

இப்பயிலரங்கில் 118 மாணவ, மாணவியர் பங்கேற்று முன்னணி நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் செயல்பாட்டினை மேற்கொண்டனர். அவர்களுக்கு கணினித்துறை இயக்குநர் முனைவர் முகமது சாதிக் சான்றிதழ்களை வழங்கி பாராட் டினார்.

கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல்முருகன் வழிகாட்டுதலின் பேரில் நடந்த பயிலரங்கு நிகழ்ச்சியை துறைத் தலை வர் முனைவர் ஜாஸ்பர் ஞானச்சந்திரன் ஏற்பாடு செய்திருந்தார்.

## எப்.எக்ஸ். எம்.பி.ஏ சங்க தொடக்க விழா!

பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியின் FXDOMS எம்.பி.ஏ துறையின் கருத்தரங்கு நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு முதன்மை விருந்தினராக நெல்லை சிஸ்டம்ஸ் அண்ட் சர்வீசஸ் நிர்வாக இயக்குநர் V.பார்த்தசாரதி கலந்து கொண்டார். மாணவர்களின் பிரார்த்தனை பாடலுடன் நிகழ்ச்சி தொடங்கியது, அதைத் தொடர்ந்து MoC குழுவின் வரவேற்புரை நடைபெற்றது

. இதனையடுத்து முதன்மை விருந்தினர் V.பார்த்தசாரதி உரையாற்றினார். அப்போது, அவர் தொழில் முனைவோர் மற்றும் பிற மேம்பாட்டுத் திட்டங்களை அறிமுகப்படுத்தினார். பின்னர் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் தொழில் துறையிலும் ஒரு கல்வியாளராகவும், தனது பத்து வருட பணி அனுபவமானது ஏராளமானஅனுபவங்களையும்



நெல்லை சிஸ்டம்ஸ் அண்ட் சர்வீசஸ் நிர்வாக இயக்குநர் V.பார்த்தசாரதி பங்கேற்றார்

வாழ்க்கை அனுபவங்களை உள்ளடக்கியது. மேலும், Ph.D-யின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். எதையாவது விரும்புதல், அறிவிற்கான பசி மற்றும் அதை அடைய வாழ்க்கையில் ஒழுக்கம் அவசியம் என்றும், கல்வியில் மட்டும் மாணவர்கள் கவனம் செலுத்த வேண்டும். ஆனால் ஒரு மாணவர் தன்னைச் சுற்றி பொதுவான விழிப்புணர்வில் ஆர்வமாக இருக்க வேண்டும் என்று மாணவர்களிடம் கூறினார். ஒவ்வொரு நாளும் செய்தித்தாள் வாசிப்பதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும் என்று மாணவர்களை ஊக்குவித்தார். மனிதவள மேம்பாட்டாளர் மற்றும் வணிக பயிற்சியாளர்களுக்கு எதிர்காலத்தில் நிறைய வாய்ப்புகள் இருக்கும் என்பதால், கல்லூரியின் டாம்ஸ் குழுவில் உள்ள மாணவர்களை சேர்த்துக் கொள்ளத் தயாராக இருப்பதாக இதில் தொழில்முனைவோர் துறை இயக்குநர் முனைவர் லூர்டஸ் பூபாலராயன் கலந்து கொண்டார்.